# வழக்கில் வர்த்தகர் சாமிநாதன் வெற்றி



*வழக்கில் வெற்றிபெற்ற வர்த்தகர் சாமிநாதனுடன் அவரின் வழக்கறிஞர்.*

(ஆர்.குணா)

கோலாலம்பூர், ஜூன் 24- வர்த்தகர் சாமிநாதன் என்பவர் தமக்கு 9 லட்சத்து 86 ஆயிரத்து 700 வெள்ளி வழங்க வேண்டும் என்று கோரி ஷாமிலா நான்சி டேவிட் வழக்கு தொடுத்திருந் தார். பணம் வாங்கியதற்கான ஒப் பந்தம் எல்லாம் இருக்கிறது என்ற அடிப்படையில் இவர் போட்ட வழக்கு 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் தேதி விசாரணைக்கு வந்தது. செஷன்ஸ் நீதிமன்றத்தின் தீர்ப்பு வர்த்தகர் சாமிநாதனுக்கு சாதகமாக இருந்ததால் ஷாமிலா கோலாலம்பூர் நீதிமன்றத்திடம் மேல் முறையீடு செய்தார்.

நேற்றுமுன்தினம் வழக்கினை விசாரித்த உயர் நீதிமன்றம் ஷாமிலாவின் மேல் முறையீட்டை தள்ளுபடி செய்து செஷன்ஸ் நீதி மன்றத்தின் தீர்ப்பினை நிலை நாட்டியது.

இருவருக்கும் ஏற்பட்டதாக கூறப்படும் ஒப்பந்தத்தில் உருப் படியாக எந்தவோர் ஆதாரமும் இல்லை என கோலாலம்பூர் உயர்நீதிமன்றத்தின் நீதிபதி டத்தோ ஹஸ்னா பிந்தி முகமட் தெரிவித்தார். இதனால் மேல் முறையீடு தள்ளுபடி செய்யப் பட்டது என்று தெரிவிக்கப்பட் டது. வர்த்தகர் சாமிநாதன் சார்பில் வழக்கறிஞர் முனியாண்டியும் எம்.டினேஷும் ஆஜரானார்கள். ஷர்மிலாவை வழக்கறிஞர் கே.ஹரிகிருஷ்ணன் பிரதி நிதித்தார்.